**Dated : 28.07.2026** (நேரம் : மதியம் 12.20 மணி)

**MCOP. No:70/2025**

**ம.சா. 1 திரு. ஜகாங்கீர் அலி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

விபத்து சமயம் நான் ஓட்டிச்சென்ற TN 65 AD 1001 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் நான், என் மனைவி மற்றும் 5 வயது குழந்தை ஆகியோர் சென்றோம். நாங்கள் அம்மா பூங்காவில் இருந்து கிளம்பி குமரைய்யா கோவில் செல்வதற்காக தேசிய நெடுஞ்சாலையில் வாகனத்தை ஓட்டிச் சென்றேன். விபத்து சமயம் நாங்கள் சென்ற தேசிய நெடுஞ்சாலையின் நடுவில் Divider இருந்தது. தேசிய நெடுஞ்சாலையில் ஒருமுனையிலிருந்து மறுமுனைக்கு வருவதற்கு Divider முடியும் இடத்தில் U–Turn அடித்து தான் வரவேண்டும் என்றால் சரிதான். நான் போக்குவரத்து விதிகளை மதிக்காமல் சாலையின் இடதுபுறத்திலிருந்து வலதுபுறம் நோக்கி எந்தவித சமிக்ஞையையும் செய்யாமல் திடீரென்று சாலையின் வலதுபுறம் கடந்ததால் என்னுடைய கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சமயம் நான் தலைக்கவசம் அணிந்திருந்தேன், என் மனைவி தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. விபத்துசம்பந்தமாக விபத்து நடந்து 4 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்ததால் அவ்வாறு 4 நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன். நான் மொத்தமே 4 நாட்கள் தான் சிகிச்சையில் இருந்தேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ஆவணத்தின்படி எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் பூரணமாக குணமடைந்துவிட்டது என்றும், எனக்கு எதிர்கால மருத்துவ செலவும் எதுவும் ஏற்படக்கூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.3 ஆவணத்தில் முன்பணமாக

J JEYA SUTHAHAR
Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.28 16:28:59 +0530

செலுத்திய தொகையும் சேர்க்கப்பட்டு கூடுதல் இழப்பீடு பெறுவதற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதன் உடன் இணைப்பாக காட்டப்பட்டுள்ள மருந்து பில்களுக்கான தொகை ஏற்கனவே மொத்த பில்லில் சேர்க்கப்பட்டுள்ளதால் அந்த தொகை எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து மாதம் ரூ.50,000/– சம்பாதித்ததாக காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனம் வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்றும், அந்த காப்பீடு நிறுவனத்தை வழக்கில் சேர்க்காததால் மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மனுவானது காலங்கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின்படி மனு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் மிகைப்படுத்தி இழப்பீட்டு தொகை கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ,5 வரிசை பில்கள் அனைத்தும் மருத்துவ சிகிச்சைக்கு பின்னிட்டு கூடுதல் இழப்பீடு பெறுவதற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அவற்றை வழங்கிய மருத்துவ அதிகாரியை விசாரித்தால் தான் அவற்றின் உண்மை தன்மை பற்றி தெரிய வரும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் மோட்டார் வாகன விதிகளை அனுசரித்து வாகனத்தை ஓட்டாமல் கவனக்குறைவாக ஓட்டிச்சென்று விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை .**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2026.07.28 16:29:04 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.